# முதுகலை பட்டதாரி ஆசிரியர் தமிழ் – 2001

1. ஒரு பிடிச்சோறு - இதிலுள்ள பிடி என்பது
அ) பெண் யானை ஆ) உணவுப் பெயர் இ) முதனிலைத் தொழிற்பெயர் ஈ) சினைப்பெயர்
***விடை : இ) முதனிலைத்தொழிற்பெயர்***

2. இருதிணை மூவிடங்களுக்கும் பொதுவாக வருவன
அ) பொதுப்பெயர் ஆ) வினையாலணையும் பெயர் இ) ஆகுபெயர் ஈ) காரணப்பெயர்
***விடை : அ)பொதுப்பெயர்***

3. பலகை என்பதனைப் பல + கை எனப் பிரித்துப் பொருள் கொண்டால் அது
அ) பிரிமொழி ஆ) தொடர்மொழி இ) பொதுமொழி ஈ) இனமொழி
***விடை : இ)பொதுமொழி***

4. வினைத்தொகையை நன்னூலார் எவ்வாறு கட்டியுள்ளார்?
அ) காலம் கடந்த பெயரெச்சம் ஆ) முக்காலப்பெயர்
இ) குறிப்பு வினைமுற்று ஈ) ஊறுகாய்ச்சொல்
***விடை : அ) காலம் கடந்த பெயரெச்சம்***

5. வினைச்சொல்லின் அடையாளம்
அ) வேற்றுமை ஏற்கும் ஆ) காலம் காட்டும்
இ)நினைத்தபோதுதோன்றும் ஈ)செய்யுளில் மட்டும் வரும்
***விடை : ஆ) காலம் காட்டும்***

6. தனக்குரிய ஒரு மாத்திரையிலிருந்து குறைந்து அரைமாத்திரையாய் ஒலிக்கப்படும் எழுத்து
அ) உயிர் எழுத்து ஆ) மெய் எழுத்து இ) குற்றியலுகரம் ஈ) ஒற்றளபெடை
***விடை : இ) குற்றியலுகரம்***

7. கால் மாத்திரையாக ஒலிக்கப்படும் எழுத்து
அ) ஆய்தக் குறுக்கம் ஆ) மகரக் குறுக்கம் இ)குற்றியலுகரம் ஈ)A & B இரண்டும் சரி
***விடை : ஈ)A & B இரண்டும் சரி***

8. நெடுங்கணக்கு என்று சுட்டப்படுவது
அ) வங்கிக் கணக்கு ஆ) பள்ளிக்கணக்கு
இ)தமிழ்எழுத்துக்கள் ஈ) அரேபிய எழுத்துக்கள்
***விடை : இ)தமிழ்எழுத்துக்கள்***

9. தமிழ்மொழியின் மிகப் பழைய எழுத்து
அ) பிராமி எழுத்து ஆ)தேவநாகரி எழுத்து இ) வட்டெழுத்து ஈ) பைசாச எழுத்து
***விடை : இ) வட்டெழுத்து***

10. எழுத்திலக்கணம் கூறும் தமிழ்நூல்
அ) நம்பியகப் பொருள் ஆ) நன்னூல் இ) திருக்குறள் ஈ) நளவெண்பா
***விடை : ஆ) நன்னூல்***

11. பிறமொழிச் சொற்களைக் கடன் வாங்குவோர் கைக்கொள்ள வேண்டிய நெறிமுறையைத் தமிழில் முதலில் வகுத்தளித்தவர்
அ) திருவள்ளுவர் ஆ) திருத்தக்கதேவர் இ) இளங்கோ ஈ) தொல்காப்பியர்
***விடை : ஈ) தொல்காப்பியர்***

12. மக்களின் பேச்சிலும் செய்யுளிலும் வழக்கிலுள்ள தமிழ்ச்சொற்களின் பெயர்
அ) இயற்சொல் ஆ) திரிசொல் இ) உரிச்சொல் ஈ) திசைச்சொல்
***விடை : அ) இயற்சொல்***

13. பூ, கை என்பன
அ) உயிர் மெய் எழுத்துக்கள் ஆ) நெடில் எழுத்துக்கள்
இ) வல்லின எழுத்துக்கள் ஈ) ஓரெழுத்து ஒரு மொழிகள்
***விடை : ஈ) ஓரெழுத்து ஒரு மொழிகள்***



www.Padasalai.Net www.puthiyavidiyaltheni.in
http://www.trbtnpsc.com/2013/07/trb-questions-and-study-materials.html

## முதுகலை பட்டதாரி ஆசிரியர் தமிழ் – 2001

14. தமிழிலுள்ள மொத்த எழுத்துக்கள் எத்தனை?
அ) 247 ஆ) 216 இ) 245 ஈ) 367
***விடை : அ) 247***

15. செய்யுளில் ஓசை குறையாத இடத்தும் குறில் நீண்டு ஒலிப்பதற்கு என்ன பெயர்?
அ) நீட்டல் விகாரம் ஆ) குறில் அளபெடை இ) இன்னிசைஅளபெடை ஈ) நெடில் அளபெடை
***விடை : இ) இன்னிசைஅளபெடை***

16. அடிச்சொற்கள் அனைத்தும் ஓரசைச் சொற்களே என்ற கருத்தைக் கூறிய ஐரோப்பிய மொழி நூல் அறிஞர்
அ) மாக்ஸ் முல்லர் ஆ) ஜி.யூ.போப் இ) கால்டுவெல் ஈ) தாம்சன்
***விடை : இ) கால்டுவெல்***

17. அரேபியா வடஆப்பிரிக்கா போன்ற பகுதிகளில் பேசப்படும் மொழியினம்
அ) அன்னாமி இனம் ஆ) ஆரிய இனம் இ) நீக்ரோ இனம் ஈ) செமிட்டிக் இனம்
***விடை : ஈ) செமிட்டிக் இனம்***

18. தேவபாஷை என்று சிலரால் புகழப்பட்ட இந்திய மொழி
அ) தமிழ் ஆ) உருது இ) சமஸ்கிருதம் ஈ)கொங்கணி
***விடை : இ) சமஸ்கிருதம்***

19. வம்ப வடுகர் என்று பழந்தமிழ் நூல்களில் சுட்டப்படும் மக்களின் பேச்சு மொழி
அ) மராத்தி ஆ) ஒரியா இ) குடகு ஈ) தெலுங்கு
***விடை : ஈ) தெலுங்கு***

20. திராவிட மொழிகளைத் திருத்திய – திருந்தாத என இரண்டு வகையாகப் பகுத்தவர்
அ) குண்டர்ட் ஆ) வீரமா முனிவர் இ) ஹீராஸ் பாதிரியார் ஈ) கால்டுவெல்
***விடை : ஈ) கால்டுவெல்***

21. தமிழ்மொழியில் சொற்றொடர்கள் பெரும்பாலும் எதில் தொடங்கும்?
அ) எழுவாய் ஈ) பயனிலை இ) செயப்படுபொருள் ஈ) மூவிடப்பெயர்
***விடை : அ) எழுவாய்***

22. இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல் என்பதற்கான எடுத்துக்காட்டு
அ) செங்கால் நாரைஆ) கவி செந்தாழி இ) குறுகுறு நடந்து ஈ) நீர் தண்ணிது
***விடை : ஈ) நீர் தண்ணிது***

23. பொருட் சிறப்புக் குறைந்து சுருங்கி விட்ட சொல்
அ) எழில் ஆ) நாற்றம் இ) அழகு ஈ) மரபு
***விடை : ஆ) நாற்றம்***

24. விருந்து என்னும் சொல் தொல்காப்பியர் காலத்தில் என்ன பொருளில் வழங்கப்பட்டது?
அ) புதுமை ஆ) புன்னகை இ) உறவினர் ஈ) நிறைவான பதார்த்தங்கள்
***விடை : அ) புதுமை***

25. செட்டிநாட்டில் காவணம் என்னும் சொல்லால் சுட்டப்படும் பொருள்
அ) உள்ளாடை ஆ) கோபம் இ) பகடி ஈ) பந்தல்
***விடை : ஈ) பந்தல்***

26. தமிழ்மொழியை அரவம் என்று சுட்டும் மக்கள்
அ) முஸ்லிம்கள் ஆ) வங்காளிகள் இ) தெலுங்கர்கள் ஈ) பனியாக்கள்
***விடை : இ) தெலுங்கர்கள்***

27. இக்காலம் மலையாளம் பேசும் நிலப்பபகுதியின் பழைய பெயர்
அ) சேரநாடு ஆ) சோழ நாடு இ) பாண்டியநாடு ஈ) பல்லவநாடு
***விடை : அ) சேரநாடு***

www.Padasalai.Net www.TrbTnpsc.com



28. ஆண்பெண் அலி என்று பால் பாகுபாடு அமைந்துள்ள மொழியினம்
அ) திராவிட மொழியினம் ஆ) தமிழ் மொழியினம்
இ) ஆரிய மொழியினம் ஈ) சீனமொழியினம்
***விடை : இ) ஆரிய மொழியினம்***

29. சகரக் கிளவி மொழி முதல் வராது என்று கூறும் இலக்கண நூல்
அ) நேமி நாதம் ஆ) நன்னூல் இ) தொல்காப்பியம் ஈ) வீரசோழியம்
***விடை : இ) தொல்காப்பியம்***

30. மொழிகளின் தனிச் சிறப்பியல்புகளை எடுத்துக்காட்ட வல்லதாக அமைவது
அ) எழுத்து அமைப்பு ஆ) சொற்றொடர் அமைப்பு இ) எண்ணுப்பெயர்கள் ஈ) ஊர்ப்பெயர்கள்
***விடை : ஆ) சொற்றொடர் அமைப்பு***

31. காரைக்கால் அம்மையார் வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ள கனி
அ) பலாக்கனி ஆ) மாங்கனி இ) கதலி ஈ) கொய்யாக்கனி
***விடை : ஆ) மாங்கனி***

32. ஆளுடைய பிள்ளை என்று சிறப்பிக்கப்பட்ட சைவச் சான்றோர்
அ) சம்பந்தர் ஆ) அம்மையார் இ) சுந்தரர் ஈ) மணிவாசகர்
***விடை : அ) சம்பந்தர்***

33. திருமுறை கண்ட சோழன்
அ) இராஜராஜன் ஆ) இராஜராசசோழன் இ) கரிகாலன் ஈ) குலோத்துங்கன்
***விடை : அ) இராஜராஜன்***

34. சூடிக் கொடுத்த சுடர்க்கொடி – யார்?
அ) ஔவையார் ஆ) ஆண்டாள் இ) மங்கையர்க்கரசி ஈ) பரவையார்
***விடை : ஆ) ஆண்டாள்***

35. தோல்வியுற்ற மன்னன் பெயரைச் சாரந்து பாடப்படும் பிரபந்தம்
அ) அந்தாதி ஆ) கலம்பகம் இ) தூது ஈ) பரணி
***விடை : ஈ) பரணி***

36. பதிற்றுப்பத்து எந்த மன்னர்களைப் போற்றும் நூல்)
அ) சேரர்கள் ஆ) சோழர்கள் இ) பாண்டியர்கள் ஈ) வேளிர்கள்
***விடை : அ) சேரர்கள்***

37. முடியுடைய மன்னர் மூவர்க்கும் உரிய காலம்
அ) முப்பால் ஆ) இராமாயணம் இ)சிலப்பதிகாரம் ஈ) மனோன்மணி
***விடை : இ)சிலப்பதிகாரம்***

38. பௌத்த சமயச் சார்புடைய காப்பியம்
அ) சீறாப்புராணம் ஆ) மணிமேகலை இ) தேம்பாவணி ஈ) திருவாசகம்
***விடை : ஆ) மணிமேகலை***

39. 'மன்னுயிர்க்கெல்லாம் உண்டியும் உடையும் உறையுளும் அல்லது கண்டதில்' என அறிவுறுத்தும் காப்பியம்
அ) இராமாயணம் ஆ) மகாபாரதம் இ) பரிபாடல் ஈ) மணிமேகலை
***விடை : ஈ) மணிமேகலை***

40. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று முழங்கும் திருமுறை நூல்
அ)தொல்காப்பியம் ஆ) ஆசாரக்கோவை இ) திருமந்திரம் ஈ) களவழிநாற்பது
***விடை : இ) திருமந்திரம்***

41. தமிழ்ச் சங்கங்களைப் பற்றி விளக்கமாகக் கூறும் முதல் நூல்
அ) தொல்காப்பியம் ஆ)புறநானூறு இ) இறையனார் களவியல் உரை ஈ)நவநீதப்பாட்டியல்
***விடை : இ) இறையனார் களவியல் உரை***



www.Padasalai.Net
www.puthiyavidiyaltheni.in
http://www.trbtnpsc.com/2013/07/trb-questions-and-study-materials.html

முதுகலை பட்டதாரி ஆசிரியர் தமிழ் – 2001

42. பத்துப்பாட்டில் உள்ள ஆற்றுப்படைகளின் எண்ணிக்கை
அ) 5 ஆ) 6 இ) 7 ஈ) 8
***விடை : அ) 5***

43. நெடுந்தொகை என்பது
அ) புறநானூறு ஆ) அகநானூறு இ) நெடுநல்வாடை ஈ) திருக்குறள்
***விடை : ஆ) அகநானூறு***

44. குறிஞ்சித்திணை பாடுவதில் சிறந்த சங்ககாலப் புலவர்
அ) ஔவையார் ஆ) கபிலர் இ) பரணர் ஈ) பாரி
***விடை : ஆ) கபிலர்***

45. பாரதம் பாடிய பெருந்தேவனார்
அ) கடவுள்வாழ்த்துப் பாடியவர் ஆ) உமறுப்புலவரின் நண்பர்
இ) தேவாரத்தைத் தொகுத்தவர் ஈ) வெண்பா பாடுவதில் வல்லவர்
***விடை : அ) கடவுள்வாழ்த்துப் பாடியவர்***

46. கரந்தைத் திணை என்பது
அ) கோட்டை முற்றுகை ஆ) கோட்டைக்காவல்
இ) ஆநிரை கவர்தல் ஈ) ஆநிரை மீட்டல்
***விடை : ஈ) ஆநிரை மீட்டல்***

47. புறப்பொருள் வெண்பாமாலை சுட்டும் புறத்திணைகள்
அ) 7 ஆ) 12 இ) 16 ஈ) 26
***விடை : ஆ) 12***

48. பேதமை காரணமாகத் தோன்றும் மெய்ப்பாடு
அ) நகை ஆ) அழுகை இ) இளிவரல் ஈ) உவகை
***விடை : அ) நகை***

49. இறைச்சி தானே ..........
அ) சுவையான உணவு ஆ) இனிமைநல்கும்
இ)பொருள்புறத்ததுவே ஈ) எல்லோர்க்கும் வேண்டும்
***விடை : இ)பொருள்புறத்ததுவே***

50. சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தவர்கள்
அ) சேரர்கள் ஆ) சோழர்கள் இ) பாண்டியர்கள் ஈ) களப்பிரர்கள்
***விடை : இ) பாண்டியர்கள்***

51. குறள் வெண்பா என்பது
அ) ஈரடி வெண்பா ஆ) மூவடி வெண்பா இ) நாலடி வெண்பா ஈ) சுந்தரனார் இயற்றிய நூல்
***விடை : அ) ஈரடி வெண்பா***

52. 'பொருள் என்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும் எண்ணிய தேயத்துச் சென்று' இக்குறட்பாவில் அமைந்துள்ள அணி
அ) உவமை அணி ஆ) ஏகதேச உருவகஅணி இ) தற்குறிப்பேற்ற அணி ஈ)தீவக அணி
***விடை : ஆ) ஏகதேச உருவகஅணி***

53. முல்லைத் திணையின் உரிப்பொருள்
அ) ஏங்கல் ஆ) இருத்தல் இ) அழுதல் ஈ) சிரித்தல்
***விடை : ஆ) இருத்தல்***

54. அறத்தொடு நிற்றல் என்பது
அ) உபதேசம் செய்தல் ஆ) காதலை வெளிப்படுத்தல்
இ) தர்மம் செய்தல் ஈ) கணவனைப்பேணல்



http://www.trbtnpsc.com/2013/07/trb-questions-and-study-materials.html

***விடை : ஆ) காதலை வெளிப்படுத்தல்***

55. ஒரு வழித் தணத்தல் என்பது
அ) பிரிவு ஆ) வெளியூர் செல்லல் இ) வெளியூரிலிருந்து திரும்பல் ஈ) தலைவனைக் காணல்
***விடை : அ) பிரிவு***

56. எழுவாய் என்பது
அ) பெயர்ச்சொல் ஆ) காலம்காட்டும் இடைநிலை
இ) உயிரளபெடை ஈ) ஓரசைச் சொல்
***விடை : அ) பெயர்ச்சொல்***

57. அகவலோசை எப்பாவிற்கு உரியது?
அ) வெண்பா ஆ) கலிப்பா இ) ஆசிரியப்பா ஈ) மருட்பா
***விடை : இ) ஆசிரியப்பா***

58. நீரும் நெருப்பும் என்பது
அ) முரண் தொடைஆ) பண்புத்தொகை இ) ஆசிரியத்தளை ஈ) உயர்வும்மை
***விடை : அ) முரண் தொடை***

59. மிகச் சிறந்த யாப்பிலக்கண நூல்
அ) நன்னூல் ஆ) வச்சணந்திமாலை இ) பன்னிருபாட்டியல் ஈ) காரிகை
***விடை : ஈ) காரிகை***

60. நீர் வழிப் படுஉம் புணைபோல்- இதிலுள்ள அணி
அ) தன்மை அணி ஆ) உருவகஅணி இ) உவமை அணி ஈ) நீர்மை அணி
***விடை : இ) உவமை அணி***

61. தமிழ்நாட்டில் சைனிக் பள்ளி அமைந்துள்ள இடம்
அ) கோயம்புத்தூர் ஆ) சேலம் இ) திருச்சிராப்பள்ளி ஈ) கன்னியாகுமரி
***விடை : அ) கோயம்புத்தூர்***

62. 1944-ம் ஆண்டின் சொர்ஜண்ட் அறிக்கை ….. நிறுவுவதை வலியுறுத்தியது
அ) முன்-ஆரம்ப பள்ளிகள் ஆ) ஆரம்பப் பள்ளிகள்
இ) தொழில் பள்ளிகள் ஈ) பொது பள்ளிகள்
***விடை : அ) முன்-ஆரம்ப பள்ளிகள்***

63. தஞ்சாவூர் பல்கலைக்கழகம் பிரத்தியேகமான …. பாடங்களை கற்பிக்கிறது.
அ) கம்ப்யூட்டர் ஆ)தமிழ் இலக்கியம்
இ) ஓரிணயட்டல் மொழிகள் இ) அனைத்து விஷயங்கள்
***விடை : ஆ)தமிழ் இலக்கியம்***

64. தாசிஸ்டோஸ்கோப்…ஐ அளவிட பயன்படுகிறது
அ) கவனித்தலின் நேரம் ஆ) கற்றலின் நேரம்
இ) மறத்தலின் நேரம் ஈ) நினைவின் நேரம்
***விடை : அ) கவனித்தலின் நேரம்***

65. பாவ்லோ….. கொள்கையை அறிவித்தார்.
அ) கிளாஸிகல் கண்டிஷனிங் ஆ) ஆப்பரண்ட் கண்டிஷனிங்
இ) ஜெனரல் கண்டிஷனிங் ஈ) இவற்றுள் எதுவுமில்லை
***விடை : அ) கிளாஸிகல் கண்டிஷனிங்***

66. DTERT யின் விரிவாக்கம்
அ) டைரக்டோரேட் ஆ∴ப் டீச்சிங் எஜுகேஷன், ரிசர்ச் அண்ட்டிரெயினிங்
ஆ) டைரக்டோரேட் ஆ∴ப் டீச்சர் எஜுகேஷன், ரிசர்ச் அண்ட் டிரெயினிங்
இ) டிஸ்டன்ஸ் டீச்சிங் எஜுகேஷன், ரிசர்ச் அண்ட் டிரெயினிங்
ஈ) டிஸ்டன்ஸ் டீச்சிங் எஜுகேஷன், ரிசர்ச் அண்ட் ரீ-டீச்சிங்



www.puthiyavidiyaltheni.in
www.Padasalai.Net

***விடை : ஆ) டைரக்டோரேட் ஆ.்.ப் டீச்சர் எஜுகேஷன், ரிசர்ச் அண்ட் டிரெயினிங்***

67. தேவைகளின் குரு மரபு என்ற கோட்பாட்டை கூறியவர்
அ) ஆபிரஹாம் மாஸ்லோ ஆ) ஜீன் பியாஜே
இ) பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் ஈ) மெக்லிலாண்ட்
***விடை : அ) ஆபிரஹாம் மாஸ்லோ***

68. நுண்ணறிவு ஈவை கணக்கிடுவதற்கான சூத்திரம்
அ) $IQ = \frac{MA}{CA} \times 100$ ஆ) $IQ = \frac{MA}{CA} \times 100 \pm 5$
இ) $IQ = \frac{CA}{MA} \times 100 \pm 5$ ஈ) $IQ = \frac{CA}{MA} \times 100$
***விடை : அ) $IQ = \frac{MA}{CA} \times 100$***

69. பிரடெரிக் ஜே.மெக்டொனால்டு நிறுவிய பள்ளி
அ) சைனிக் பள்ளிகள்ஆ) சமூக பள்ளிகள்
இ) நடமாடும் பள்ளிகள் ஈ)பொதுமக்கள்பள்ளிகள்
***விடை : இ) நடமாடும் பள்ளிகள்***

70. மிதக்கும் பல்கலைக்கழகம் (எஸ்.எஸ்.யுனிவர்ஸ்) சென்னை துறைமுகத்திற்கு வந்த ஆண்டு
அ) 1977 ஆ) 1978 இ) 1979 ஈ) 1980
***விடை : ஆ) 1978***

71. புதிய கல்விக் கொள்கை (1986)ஐ அமுலில் கொண்டு வந்தவர்
அ) இந்திராகாந்தி ஆ) ராஜீவ்காந்தி
இ) மஹாத்மாகாந்தி ஈ) இவர்களில் யாருமிலர்
***விடை : ஆ) ராஜீவ்காந்தி***

72. இந்தியாவின் தலைவிதி அவளின் பள்ளி அறையில் உருவாக்கப்படுகிறது என்னும் ஆரம்ப அறிக்கை காணப்படுவது.
அ) கோத்தாரி கல்விக்குழு ஆ) சம்பூர்ணாநந்தா கமிட்டி
இ) இந்திய கல்விக்குழு ஈ) மால்சம் ஆதிசேஷய்யர்கமிட்டி
***விடை : அ) கோத்தாரி கல்விக்குழு***

73. நவோதயா பள்ளிகளை நிர்வாகம் செய்வது
அ) மாநில அரசுகள் ஆ) மத்திய அரசு
இ) தனிப்பட்ட அதிகாரிகள் ஈ) மத்திய மற்றும் மாநில அரசுகள்
***விடை : ஆ) மத்திய அரசு***

74. கல்வியின் தற்போதைய அமைப்பு
அ) குழந்தையை மையமாகக் கொண்டது ஆ) பாடத்தை மையமாகக் கொண்டதுஸ
இ) ஆசிரியரை மையமாகக் கொண்டது ஈ) இவை எல்லாம்
***விடை : அ) குழந்தையை மையமாகக் கொண்டது***

75. 'தலையீடாமை' ஆசிரியர் நடைமுறையில் கொண்டுவருவது
அ) அதிக கட்டுப்பாடு ஆ) குறைந்த கட்டுப்பாடு
இ) கட்டுப்பாடு இல்லாமை ஈ) முழுமையான சுதந்திரம்
***விடை : இ) கட்டுப்பாடு இல்லாமை***

76. ஆளுமை என்னும் சொல்லில் பெர்சனா என்பது
அ) நடிகரின் அங்கங்களின் தோற்றம் ஆ) நடிகர்
இ) நடிகரால் அணியப்பட்ட முகமூடி ஈ) நடிகரால் அணியப்பட்ட ஆடை
***விடை : இ) நடிகரால் அணியப்பட்ட முகமூடி***

77. ஒரு குழந்தையின் முதல் ஆசிரியர்



www.Padasalai.Net
www.puthiyavidiyaltheni.in

அ) முன்-ஆரம்ப ஆசிரியர் ஆ) ஆரம்ப ஆசிரியர் இ) பெற்றோர் ஈ) சமூகம்
***விடை : இ) பெற்றோர்***

78. ‘மேம்பட்ட சமூக ஒழுங்கு முறைக்கான கல்வி’ என்னும் புத்தகத்தை எழுதியவர்
அ) ரூஸ்லோ ஆ) ரஸ்ஸல் இ) மாஸ்லோ ஈ) அரவிந்தர்
***விடை : ஆ) ரஸ்ஸல்***

79. ‘ஒரு நாட்டின் கல்வி ஏழை எளியவர் முதல் எல்லோருக்கும் என்பதை குறிக்கோளாக கொள்ள வேண்டும்’ என்பதை வலியுறுத்தியவர்
அ) நேரு ஆ) அபுல்கலாம் ஆசாத் இ) காந்தி ஈ) மாண்டிசோரி
***விடை : இ) காந்தி***

80. மேல்நிலைப்பள்ளியில் பலவிதமான பாடத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு
அ) 1947 ஆ) 1951 இ) 1968 ஈ) 1978
***விடை : ஈ) 1978***

81. நபிபெருமானார் வரலாற்றைப் பாடும் தமிழ்க் காப்பியம்
அ) குத்பு நாயகம் ஆ) மி∴ராஜ் மாலை இ) சீறாப்புராணம் ஈ) நாயகத் திருப்புகழ்
***விடை : இ) சீறாப்புராணம்***

82. செத்தும் கொடுத்த வள்ளல் என்ற சிறப்புக்குரியவர்
அ) குமணன் ஆ) சீதக்காதி இ) வள்ளலார் ஈ) எம்.ஜி.ஆர்.
***விடை : ஆ) சீதக்காதி***

83. மகாமதியர் என்று திரு.வி.க. பாராட்டிய முஸ்லிம் பாவலர்
அ) செய்குத்தம்பிப்பாவலர் ஆ) பாவலர் அகமது ஷா
இ) செய்யது அகமதுப்பாவலர் ஈ) பாவலர் மதாறுப் புலவர்
***விடை : அ) செய்குத்தம்பிப்பாவலர்***

84. விபுலானந்தர் என்ற இலங்கைத் தமிழர் இயற்றிய இசை நூல்
அ) யாழ்நூல் ஆ) கருணாமிர்த சாகரம் இ) இசையமுது ஈ) மனோன்மணிக்கண்ணி
***விடை : அ) யாழ்நூல்***

85. கண்ணம்மா என் காதலி என்று கண்ணன் பாட்டுப் பாடிய மகாகவி
அ) கண்ணதாசன் ஆ) சுரதா இ) பாரதிதாசன் ஈ) பாரதியார்
***விடை : ஈ) பாரதியார்***

86. தத்துவ போதகசாமி என்ற பெயரை மாற்றிக் கொண்ட தமிழ் உரைநடையின் தந்தை
அ) சீகன்பால்குஐயர் ஆ) கால்டுவெல் இ) ராபர்ட் டிநொபிலி ஈ) இரேணியஸ்
***விடை : இ) ராபர்ட் டிநொபிலி***

87. முதல் தமிழ் அகராதியான சதுரகராதியைத் தொகுத்தவர்
அ) வீரமாமுனிவர் ஆ) ஜி.யு. போப்
இ) ஹெச்.ஏ.கிருஷ்ணபிள்ளை ஈ) ஏ.சி.செட்டியார்
***விடை : அ) வீரமாமுனிவர்***

88. திருக்குறளை முதன் முதலில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்.
அ) டாக்டர் கால்டுவெல் ஆ) ஹீராஸ் பாதிரியார் இ) ஜி.யு.போப் ஈ) மாக்மில்லன்
***விடை : இ) ஜி.யு.போப்***

89. தமிழின் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரத்தை எழுதியவர்
அ) வடுவூர் துரைசாமி ஐயங்கார் ஆ) கல்வி
இ) வேதநாயகம் பிள்ளை ஈ) அப்துல்கபூர் சாகிபு
***விடை : இ) வேதநாயகம் பிள்ளை***

90. கிறிஸ்தவக் கம்பன் என்று பாராட்டப்படுபவர்



http://www.trbtnpsc.com/2013/07/trb-questions-and-study-materials.html

அ) வீரமாமுனிவர் ஆ) அந்தோணிக்குட்டி அண்ணாவியார்
இ) சாமுவேல்பிள்ளை ஈ)கிருஷ்ணபிள்ளை
***விடை : ஈ)கிருஷ்ணபிள்ளை***

91. உரையாசிரியர் என்றாலே இவரைத்தான் குறிக்கும்
அ) மணக்குடவர் ஆ) பரிமேலழகர் இ) இளம்பூரணர் ஈ) சேனாவரையர்
***விடை : இ) இளம்பூரணர்***

92. சந்தப்பாடல்களால் முருகனைத் துதித்தவர்
அ) முருகமணி ஆ)அதிவீரராம பாண்டியன்
இ) கந்தசாமிக்கவிராயர் ஈ)அருணகிரிநாதர்
***விடை : ஈ)அருணகிரிநாதர்***

93. ஊமையாய் இருந்து, முருகனருளால் பேசும் திறம் பெற்று, முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் பாடிய புலவர்
அ) பட்டினத்தார் ஆ) திருமூலர் இ) குமரகுருபரர் ஈ) அருணகிரி நாதர்
***விடை : இ) குமரகுருபரர்***

94. நளவெண்பாவை இயற்றியவர்
அ) புகழேந்திப் புலவர் ஆ) ஒட்டக்கூத்தர் இ) கபிலர் ஈ) வில்லிபுத்தூரர்
***விடை : அ) புகழேந்திப் புலவர்***

95. நிகண்டு இக்காலத்தில் பெற்றுள்ள வடிவம்
அ) அகராதி ஆ) அறிவியல் இ) மொழியியல் ஈ) சிறுகதை
***விடை : அ) அகராதி***

96. குடியரசு இந்தியாவின் முதல் தலைவர் யார்?
அ) டாக்டர். இராஜேந்திர பிரசாத் ஆ) டாக்டர்.இராஜகோபாலாச்சாரி
இ) டாக்டர். இராதாகிருஷ்ணன் ஈ) வி.வி.கிரி
***விடை : அ) டாக்டர். இராஜேந்திர பிரசாத்***

97. ஒளி ஆண்டு என்பது என்ன?
அ) ஒரு வகையான ஆண்டு ஆ) நேரத்தின் அளவீடு
இ) தொலைவின் ஆண்டு ஈ) ஒரு ஆண்டில் ஒளி பயணம் செய்யும் தொலைதூரம்
***விடை : ஈ) ஒரு ஆண்டில் ஒளி பயணம் செய்யும் தொலைதூரம்***

98. கலிங்கத்துப் பரணியை எழுதியவர்
அ) கம்பர் ஆ) ஜெயங்கொண்டார் இ) சேக்கிழார் ஈ) ஔவையார்
***விடை : ஆ) ஜெயங்கொண்டார்***

99. இராஜ ராஜ சோழர் கட்டியது
அ) கங்கை கொண்ட சோழபுரம் ஆ) பிரகதீஸ்வரர் கோயில்
இ) மீனாட்சிக் கோயில் ஈ) மஹாபலிபுரம் கடலோரக் கோயில்
***விடை : ஆ) பிரகதீஸ்வரர் கோயில்***

100. மராத்தான் ஓட்டப் பந்தயம்
அ) 26 மைல்கள் மற்றும் 385 கெஜங்கள் ஆ) 21 மைல்கள் மற்றும் 385 கெஜங்கள்
இ) 32 மைல்கள் மற்றும் 385 கெஜங்கள் ஈ) 19 மைல்கள் மற்றும் 385 கெஜங்கள்
***விடை : ஆ) 21 மைல்கள் மற்றும் 385 கெஜங்கள்***

www.Padasalai.Net
www.puthiyavidiyaltheni.in



http://www.trbtnpsc.com/2013/07/trb-questions-and-study-materials.html